2005 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை *(28-03-2005)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *2-04* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

75. 2003-2004 ஆம் ஆண்டிற்கான திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994*) *165 (2)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

76. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

77. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

78. 2003-2004 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

79. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படைவசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)